களைகட்டுகிறது சென்னை சங்கமம் – 2026

சிறப்பாக ஒருங்கிணைத்து வரும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.13-

“நாளை முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026” என்றும் “இதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி.” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

நாளை மறுநாள் முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான எழுச்சி மேடையாகத் திகழும் சென்னை சங்கமத்திற்கு மீண்டும் நமது திராவிட மாடல் அரசில் புத்துயிர் கொடுத்துள்ளோம். அதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை திருமதி கனிமொழி எம்.பி.,!

தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் களிப்புடன் சிறக்க, சென்னையிலும், தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடை பெறவுள்ள கலை நிகழ்ச்சிகளை அனைவரும் காண வேண்டும்! வருக... வருக...

சென்னை சங்கமம் 2026 திராவிட பொங்கல் வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட பென்ஷன் திட்ட அரசாணை வெளியீடு!

ஆசிரியர், அரசு ஊழியர்கள் நெஞ்சில் என்றும் நிலை கொண்டுள்ளார் முதல்வர்!

ஜாக்டோ - ஜியோ பாராட்டு!

சென்னை, ஜன.13-

ஜாக்டோ - ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் தாஸ் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட பென்ஷன் திட்டத்தை இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் முதல்வர் அறிவித்தார். ஆசிரியர், அரசு ஊழியர்கள் நெஞ்சில் என்றும் நிலை கொண்டுவிட்டதமிழ்நாடுமுதல்வருக்கு ஜாக்டோ - ஜியோ சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசாணையில் 50 விழுக்காடு பணி நிறைவு பெறுகின்ற போது கடைசியாக பெறும் ஊதியத்தில் 50 விழுக்காடு பென்ஷன் ஆகவும், வழங்குவது ஒரு உறுதிப்படுத்தப்பட்ட பென்ஷன் ஆக பார்க்க முடிகிறோம். அது மட்டுமல்லாமல் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு குடும்ப பென்ஷன் வழங்குவதும் வரவேற்கத்தக்க விஷயமாக நம்பிக்கை கூறப்பட்ட விஷயமாக பார்க்க முடிகிறது.

மேலும் டி.சி.ஆர்.ஜி. 25 லட்சம் வழங்குவதும் அதைவிட கூடுதலாக தமிழ்நாடு முதல்வர் பணி கொடையை 30 விழுக்காடு வழங்கி இருக்கிறார். இது மேலும் அரசு ஊழியர்கள், ஆசிரியர் மத்தியிலே இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றோம். இதைவிட கூடுதலாக பணி நிறைவு செய்யும் பொழுது தவிர்பு சிபிஎஸ் ஆப்ஷனல் கொடுத்திருப்பது இந்த பரபரப்பு செய்தியாக உள்ளது.

எதிர்முனை பிரச்சாரங்களை தூள்தூளாக்கியுள்ளது!

இது ஒரு மனநிறைவான பென்சனாக இது வழங்கப்பட்டிருப்பது எதிர்முனை பிரசாரங்களை தூள்தூளாக்கி இருக்கிறார்கள். மேலும் இடைநிலை ஆசிரியருடைய ஊதிய முரண்பாடுகள் நீக்கி மத்திய ஆசிரியர் இணையாக வழங்க வேண்டும். பி.லிட். தமிழ் படித்தவர்களுக்கு தணிக்கையில் இருந்து நீக்குவது 5400 தணிக்கை தடை நீக்குதல் உள்ளிட்ட எண்ணற்ற கோரிக்கைகளை நிவர்த்தி செய்வார், சத்துணவு அங்கன்வாடி, ஊர்ப்புற நூலகர்கள், ஊராட்சி செயலாளர், சாலை பணியாளர் உள்ளிட்ட அனைவரின் கோரிக்கையும் நிறைவேற்றிட வேண்டும்.

2026ல் முதல்வர் மேலும் பல விடியலை தருவார்!

இதற்காக தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற மகத்தான தலைவர் மேலும் பல விடியலை தருவார். ஆசிரியர், அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள் தமிழ்நாட்டில் வாழ்நாள் முழுக்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்த பென்ஷன் வழங்கிய தமிழக முதல்வருக்கு தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பாகவும் ஜாக்டோ - ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரத்தில் திராவிட பொங்கல் மாபெரும் - மாநில அளவிலான கபடி போட்டி!

எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார்!

மாதவரம், ஜன. 13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் பேரறிஞர் அண்ணா சமுதாய கூட வளாகத்தில் நடை பெற்ற போட்டிக்கு வட்டச் செயலாளர்கள் கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச் செல்வன், பி. எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் ஆகியோர் வரவேற்றனர்.

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு போட்டிகளை துவக்கி வைத்தார்.

32 அணிகள் கலந்து கொண்ட போட்டி நாக்க வுட் முறையில் நடந்தது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருப்பூர், ஈரோடு, ஆகிய மாவட்டங்களில் இருந்து கபடி அணியினர் கலந்து கொண்டனர்.

இறுதியில் அரை இறுதிப் போட்டிக்கு வட பெரும் பாக்கம் தளபதி மைக்கேல் செலக்ட், ஜி.கே.எம் கூனங் குப்பம், பாபாசாகிப் தண் டுறை, ஸ்கூல் பாய்ஸ் திரு வெள்ளைவாயல் ஆகிய அணிகள் முதல் நான்கு இடங்களை பிடித்தன.

முதல் பரிசாக ரூபாய் 25 ஆயிரம் ரொக்கம் பரிசு கோப்பை சோபா செட், இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாய் ரொக்கம் சூட் கேஸ், மூன்றாவது நான்காவது பரிசுகளாக தலா 10,000 ரூபாய் ரொக்கம் பரிசு கோப்பைகள் ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

காலையிலிருந்து மறுநாள் விடியற்காலை வரை நடை பெற்ற போட்டியில் கலந்து கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி சார்பில் உணவு வழங் கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் டி.ராம கிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் சன் முனியாண்டி, மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி. எஸ். எஸ். டி .சீனிவாசன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட செயலக அணி துணை அமைப்பாளர் எச்.பீர் முகமது, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த்,புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜி. ராஜேஷ் கண்ணன், தமிழ்மாறன், எலந்தனூர் வி. சிவபிரகாஷ், பகுதி ஆதிதிராவிடர் நல குழு துணை அமைப்பாளர் பழைய நாபாளையம் புஷ்பராஜ், அரியலூர் டி.வினோத், ராஜ்குமார், எஸ். நாகராஜ், 23வது வட்ட துணைச் செயலாளர் கோவை மு. விக்னேஸ்வரன்,டி எழில் குமார்,

17-வது வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, சி. மூர்த்தி, டி. திவாகர், ஜி. பூபாலன், எஸ். ஜோசப், சின்னதோப்பு ஜி. முனிவேல், ஜி. செல்வம், ஜி. சதீஷ்குமார்,எஸ். கமலநாதன், 17வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் வக்கீல் எம். என்.தளபதி, 19வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சாய் சங்கீத், 15வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ. தசரதன், எம். ஹரிஷ் குமார், ராஜேஷ், சரத்குமார், வட பெரும்பாக்கம் பி. செந்தில், இ. கார்த்திக், டி. மாதவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை எம். மைக்கேல் என்கின்ற மோகன்ராஜ் செய்திருந்தார்.

இறுதியாக பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என்.அஜய் தென்னவன் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை
சனவரி 13 (2005)

கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

“சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு.” என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மாமன்ற உறுப்பினர் வீ.கவிகணேசன் ஏற்பாட்டில்

திருவொற்றியூரில் திராவிடப் பொங்கல் விழா - கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

ஆ.இராசா எம்.பி. வழங்கினார்! மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன.13-

நாளும் நன்மை பயக்கும் நலத்திட்டங்களால் தமிழ் நாட்டை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தலைமைக் கழக வழக்கறிஞர்; 12-வது வார்டு சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வீ.கவிகணேசன் ஏற்பாட்டில்,

திருவொற்றியூர் செயின்ட் பால்ஸ் பள்ளி வளாகம் காலடிப்பேட்டையில், சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி, 12-வது வட்ட திமுக சார்பில்,

“சமத்துவம் பொங்கட்டும்” “தமிழ்நாடு வெல்லட்டும்” என்ற முழக்கத்தோடு திராவிடப் பொங்கல் ‘2026’ மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் தலைமை வகித்த இந்நிகழ்ச்சியில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினரும், சென்னை மண்டல பொறுப்பாளருமாகிய ஆ.இராசா எம்.பி., சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து, திருவொற்றியூரில் தி.மு.கழகத்தை கட்டி எழுப்பிய ஆதி தளகர்த்தர்களுக்கு பொற்கிழி வழங்கியும், BLA 2, BLC, BDA ஆகிய நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கோலப்போட்டியில் பங்கேற்ற மகளிருக்கு பரிசுப் பொருட்களையும் வழங்கினார்.

அவர் பேசுகையில், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 3 ஆயிரம் பொங்கல் பரிசு வழங்கி இந்த தைப் பொங்கலை சிறப்புக்குரிய மறக்க முடியாத திருநாளாக மாற்றி இருக்கிறார் என்று கழகத் தலைவருக்கு புகழாரம் சூட்டியதோடு;

இந்த பொங்கல் விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கவிகணேசனுக்கு தன்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

எழுச்சியோடும், மகிழ்ச்சியோடும் நடைபெற்ற இந்த சமத்துவப் பொங்கல் நிகழ்ச்சியில், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சிஎச். சேகர், பகுதிச் செயலாளர்கள் தனியரசு, அருள்தாசன், 12 வார்டு வட்டக் கழகச் செயலாளர் க.வீ.சதிஷ்குமார் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு மாபெரும் மாநில அளவிலான கபடி போட்டி 17வது வட்டம் வடபெரும்பாக்கத்தில் நடைபெற்றது 32 அணிகள் பங்கு பெற்ற இப்போட்டியை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ துவக்கி வைத்தார். வட்டச் செயலாளர் கே.கருணாகரன் வரவேற்பில் டி.ராமகிருஷ்ணன், மாத்தூர் கா.தாமரைச்செல்வன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், ஆர்.டி.மதன்குமார், சன் முனியாண்டி, சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.